கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

அ.வ.எண்.398/2017 வா.சா.1 விஜயகுமார்

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 09.07.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) என் தந்தை பெயர் கண்ணுசாமி என்றால் சரிதான். என் தந்தை வழி தாத்தா பெயர் வேலுசாமி கவுண்டர் என்றால் சரிதான். மேற்படி என் தாத்தாவிற்கு கருப்பக்காள் மற்றும் கிட்டத்தாள் என இரு மனைவிகள் என்றால் சரிதான். முதல் மனைவி கருப்பக்காள் மூலமாக என் தாத்தாவிற்கு சுப்பேக்கவுண்டர், சண்முகவேலாயுதசாமி மற்றும் என் தந்தை கண்ணுசாமி என மூன்று ஆண் மக்கள் என்றால் சரிதான். அது தவிர அவர்களுக்கு இரண்டு மகள்கள் உள்ளனர். 2 வது மனைவி கிட்டாத்தாள் மூலமாக என் தாத்தாவிற்கு இராஜு என்ற மகன் உள்ளார் என்றால் சரிதான். அவர் தவிர அவர்களுக்கு ஒரு மகள் உள்ளார்.

2) வழக்கு சொத்துக்களும், பிற சொத்துக்களும் ஆதியில் என் தாத்தா வேலுசாமியின் தந்தை பழனிக்கவுண்டருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான். அவ்வாறு பாத்தியப்பட்ட சொத்துக்களை மேற்படி பழனிக்கவுண்டர் கடந்த 10.08.1945 தேதியில் தனது பேரன்களான சுப்பேக்கவுண்டர் மற்றும் சண்முகவேலாயுதசாமி ஆகியோருக்கு ஆதரவாக பதிவு செய்யப்பட்ட உயில் ஏற்படுத்தினார் என்றால் தெரியவில்லை. மேற்படி பழனிக்கவுண்டர் இறப்பிற்கு பின் மேற்படி உயில் நடைமுறைக்கு வந்த நிலையில் மேற்படி உயில்படி சொத்துக்களை அடைந்த சண்முகவேலாயுதசாமி தன் தாயாரை மட்டும் வாரிசாக விட்டுவிட்டு

இறந்துவிட்டார் என்றால் சரிதான். அதனால் உயிலில் கண்ட சொத்துக்கள் சுப்பேக்கவுண்டருக்கு ஒரு பாதியும், கருப்பக்களுக்கும் ஒரு பாதி என்று பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான். மேற்கண்ட சொத்துக்கள் பொறுத்து சுப்பேக்கவுண்டரும், கருப்பக்காளும் சேர்ந்து கடந்த 10.08.1964 அன்று வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தினார்கள் என்றால் சரிதான். மேற்படி சொத்துக்களில் மேற்படி வா.சா.ஆ.1 ஆவணப்படி மேற்படி கண்ணுசாமி மற்றும் இராஜு ஆகியோருக்கு 3-ல் 2 பங்கு சொத்துக்களை பாத்தியப்படுத்திக்கொடுத்தார்கள் என்றால் சரிதான். எனவே வா.சா.ஆ.1 ஆவணத்திற்கு பிறகு உயில் சொத்துக்களில் சுப்பேக்கவுண்டர், கண்ணுசாமி மற்றும் இராஜு ஆகியோருக்கு தலா 1/3 பங்கு பாத்தியம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

3) வா.சா.ஆ.1 ஆவணத்தில் சேர்வைகாரன் பாளையம் கிராமத்தில் க.ச.எண்.282 நெ. காலையில் 33.65 ஏக்கர் பூமியும் 284/3 காலையில் 36 செண்ட் பூமியும் ஆக மொத்தம் 34.01 ஏக்கர் பூமி கட்டுப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ-1 ஆவணத்திற்கு பிறகு சுப்பேக்கவுண்டர், கண்ணுசாமி மற்றும் இராஜு ஆகியோர் தங்களது பங்குகளை வாய்மொழியாக பாகம் செய்துக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. மேற்படி மூவரும் தங்களது பங்குகளை வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டு முறையே தனிப்பட்டாக்கள் பெற்று தனித் தனியே அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. மேற்படி மூவரும் தங்களது பங்குகளை பிரித்துக்கொண்டார்களா என்றால் கடந்த 2012-ல் பிரித்துக்கொண்டார்கள். அவ்வாறு வாய்மொழியாக பாகம் பிரிக்கப்பட்ட பிறகு க.ச.எண்.282 என்பது க.ச.எண்கள். 282/1,

282/2, 282/3, 282/4 என நான்கு பிரிவுகளாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.